www.tamilarangam.net

# அடக்கு முறையினால் அழித்தாலும்



# ஆக்கிரமிப்பை முறியடிப்போம்

மனித இனம் உன்னதமான ஒரு வாழ்க்கையை, பரிபூரண விடுதலையை நோக்கி முன்னேறும் இக்கால கட்டத்தில், மிருகத்தனமான - மிகக் கேவலமான - பேடித்தனமான - ஒரு நிகழ்வு இவ்வுலகிலேயே நடைபெற்றது என்றால் அது 1983 யூலை வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையே ஆகும். மாந்த உணர்ச்சி கொண்ட உலகில் உள்ளவர்கள் எல்லோரும் வெட்கித் தலைகுனிந்து - வேதனைப் பட்டு - 'புத்த சமய தார்மீகத்தை' புரிந்து அதன் 'புனிதம்' என்றால் என்ன என்ற உண்மையை கண்டறிந்த கடைகெட்ட நிகழ்வு. இக்கொடூரமான வெறிகொண்ட தாக்குதலுக்குள் கொலையுண்ட கொள்கை மறவர்களில் ஒருவர், எமது இயக்கத்தின் முன்னணித் தோழர் வேலுப்பிள்ளை சந்திரகுமார் (அழகன்).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர், 1979 ஆண்டளவில் இன ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடும் இளைஞர் இயக்கத்துடன் தன்னை முழுநேரமாக இணைத்துக்கொண்டார். இயக்கப் போக்கில், மக்களைச் சார்ந்து இயங்காமல் சுத்த இராணுவப் போக்கில் இயங்குவது தவறு என்று கண்டறிந்து, புதிய பாதை அணியுடன் சேர்ந்து இயங்கி வந்தார். சித்தாந்த தெளிவு இல்லாத காரணத்தால் இவ் அணியினரும் மீண்டும் மீண்டும் தனி நபர் தாக்குதல் தன்மையை சார்ந்து இயங்குவதைக் கண்டு பலர் அதிலிருந்தும் ஒதுங்கினர். ஒதுங்கியவர்களில் சிலர் தனிப்பட்ட உல்லாச வாழ்விற்குள் சென்றாலும் தோழர் அழகன் மக்களின் விடுதலையை மையமாகக் கொண்ட அமைப்பை உருவாக்குவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையை தமது தத்துவ வழிகாட்டியாகக் கொண்டு, விறல்மிக்க வீரர்களை இயக்க முன்னோடிகளாக தேர்ந்தெடுப்பதில் விரைவுடன் செயல்பட்டார். வீரனின் சாவு விடுதலைக்காகவே என்ற உண்மையை உறுதிப்படுத்துவதற்காகவோ தோழா விழுப்புண் ஏற்று விண் உலகம் சென்றுவிட்டாய்.

அல்லல்பட்டு, அவதிப்பட்டு பல்வேறு சக்திகளின் பொய்ப் பிரசாரங்களில், அரசியல் சதுரங்கத்தில் அங்கலாய்த்துக் கொண்டு இருக்கும் தமிழீழ தேசிய இனத்திற்கு உனது கொள்கை நிலைப்பாட்டை முதலாம் ஆண்டு மூதுரையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

* * * *

1914 ஆண்டளவில் - பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே - சிங்கள முதலாளிகளின் தேசிய வாதம், இனவாத அரசியலாக தொடக்கப்பட்டது. அந்தக் காலத்தில் இருந்தே அது படிப்படியாக வளர்ந்து 1948-க்குப் பிறகு ஆட்சிக்கு வந்த பாராளுமன்ற அரசியல் கட்சிகளின் அரசியல் முழக்கமாக அமைந்தது. அரசாங்க ஆளுமையில் அது முழுமையாக - கலாச்சார, மொழி; பொருளாதார, நிலப்பரப்பு - பல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தியது. இதற்கு முக்கிய பின்னணிக் காரணம் தெற்கில் உள்ள முற்போக்கு சக்திகளை முறியடிக்கும் முயற்சியாகும். வேலை இல்லாத் திண்டாட்டம், பொருளாதார வளர்ச்சியின்மை என்பவற்றிற்கு எதிராக தெற்கில் உள்ள முற்போக்கு சக்திகள் பிரச்சாரம் செய்யும்பொழுது, தமிழர்தான் இதற்குக் காரணம், தமிழர் இல்லாவிடின் 'அப்பே லங்கா' இன்னும் பலமடங்கு முன்னேறும் என்ற தவறான தப்பெண்ணங்கள் பாராளுமன்றக் கட்சிகளால் சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டது. பின்னர் முற்போக்கு சக்திகள் என்று சொல்லிக்கொண்டு, ஏகாதிபத்திய ஏஜண்டுகளாக இருக்கும் 'புரட்சிகர மார்க்சிஸ்டு'களும் பேரினவாத பேராபத்துக்குள் பேரத்திற்காக (பாராளுமன்ற நாற்காலிகள்) பலியானார்கள்.

இது இன்று விசுவரூபம் எடுத்து விவஸ்தையில்லாத வெறித்தனம் ஆடுவதற்கு வடக்கில் உள்ள உதவாக்கரை அரசியல்வாதிகளாகிய தமிழ் தரகு முதலாளிகளினதும், நில்வுடமை பழமை பேணும் வாய்ச்சவடால் பேரினவாதிகளினதும் பம்மாத்து அரசியலும் காரணமாகும். இன்றும்கூட இவர்கள் திருந்துவதாக இல்லை. தமது வரட்டுத் தனமான அரசியலை தமிழ் மக்கள் புரிந்துகொண்டு விட்டார்கள் என்று கண்டதும், இந்திய மாயையை இன்று முக்கிய அரசியல் கொள்கைபோல் முன்வைத்துள்ளார்கள். தளத்தில் போராடாமல், தளத்தில் உள்ள தமிழ் மக்களை அணி திரட்டாமல் இந்தியாவிற்கு ஓடுவதும், தமிழகத்தில் உள்ள பொறுக்கி அரசியல்வாதிகளுடன் வீரவசன அறிக்கைகள் விடுவதுமானது, தெற்கில் உள்ள தரகு முதலாளிய அரசியல்வாதிகளுக்கு, இனவெறியை வளர்ப்பதற்கு உதவுகின்றதே தவிர உருப்படியாக ஒரு இன விடுதலை வளர்ச்சியை நோக்கிய பாதையாக அமையவில்லை.

இன்று உலக நாட்டில், அழிந்துவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தரகு சக்தியாக இலங்கை ஆளும் கும்பல் அமைந்துள்ளது. வளர்ந்து வரும் சமூக ஏகாதிபத்தியமான சோவியத்திற்கு ஆதரவாக இந்திய அரசு உள்ளது. சந்தைகளுக்கான போட்டியில் இரு ஏகாதிபத்தியங்களும் ஈடுபட்டுள்ளன. ஒருவரது ஆளுமைக்குள் உள்ள பகுதிக்குள் இன்னொன்று வலுக்கட்டாயமாகப் புகுவதற்கு சரியான சந்தர்ப்பம் பார்த்து உள்ளன. இதை அடிப்படையாகக் கொண்டு சில அரை வேக்காட்டு 'புரட்சிகர விடுதலை இயக்கங்கள்' ஈழப் பிரச்சினையில் ஈழவர்களைக் 'கா(ய்)ப்பதற்கு' இந்தியா தலையிட வேண்டும் என்று தவியாய்த் தவிக்கின்றன. இந்தியா தலையிடும் என்ற நப்பாசையில், தமது அமைப்புதான் மிக்க வலுவானது என்பதைக் காட்டுவதற்காக லட்சக்கணக்கில் பணத்தை விரயம் பண்ணி விளம்பரங்களும், பத்திரிகையாளர்களை வசப்படுத்தி அழகான மிடுக்கான இரவல் பேட்டிகளும், ஏட்டிக்குப் போட்டியாக பல அமைப்புகளும் நான் முந்தி, நீ முந்தி என 'வீரமாக' செயல்படுகின்றன. ''பார், பார், திருகோணமலை'', ''பார், பார், சுதந்திர வர்த்தகவலயம்'', ''பார், பார், அமெரிக்க கப்பல் படை அதிகாரி'', ''பார், பார், இந்து சமுத்திர சமாதானப் பிராந்தியத்திற்கு ஆபத்து'' என்ற வகையில் இந்தியா என்ற சிங்கத்திற்கு நரிகளாக பிரச்சாரம் செய்கின்றனர். இவர்கள் தம்மீதோ, தமிழ் மக்கள் மீதோ நம்பிக்கை இல்லாமல் அந்நிய தலையீட்டை அப்பட்டமாக விரும்புகின்றனர். இது இன்னொரு வகையில் தெற்கில் உள்ள சிங்கள மக்களின் அச்சத்தை அதிகப்படுத்தி, பயத்தில் பாம்பு பாய்ந்து கடிக்கும் என்ற வகையில் சிங்கள காடையர்களின் பேடித்தனமான தாக்குதலுக்கு தமிழ் மக்களைக் காவு கொடுக்கின்றது. பாசிச அரசானது இதை சாக்காக வைத்து தமிழன் என்பவன் இந்தியாவின் தரகு கூலிகள் என்ற தப்பெண்ணத்தை சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதற்கு உதவுகின்றது.

சரி, இவர்களின் நப்பாசைக்கு ஜாம்பவானாக இருக்கும் இந்திய அரசின் நிலைப்பாட்டை பார்ப்போம். பல இராச்சியங்களாகப் பிரிந்து கிடந்த இந்திய துணை கண்டம் பிரிட்டிஷ் வருகைக்குப் பின்னர் பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தான இந்தியா என அமைந்தது. பின்னர் 'சுதந்திரம்' என்ற பெயரில் பிரிட்டிசாரின் கையாட்களிடம் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கும்பொழுது ஐநூறுக்கும் மேற்பட்ட சமஸ்தானங்களிடம், விருப்பம் இருந்தால் பிரிட்டிஷ் இந்தியாவிடம் சேருங்கள் அல்லது தன்னாட்சி அதிகாரத்துடன் இருக்கலாம் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால் நடந்தது என்ன ? இரும்பு மனிதன் வல்லபாய் படேல் இராணுவத்தை வைத்து சமஸ்தானங்கள் எல்லாவற்றையும் வலுக்கட்டாயமாக இணைத்து 'ஏக இந்தியா' உருவாக்கப்பட்டது. அதாவது ஏகாதிபத்திய சுரண்டலுக்கு ஒரு பரந்த சந்தையை உருவாக்கிக்கொடுத்து எஜமானரிடம் நல்ல பெயரை வாங்கிய அடியாளாக மாறியது. பல்வேறு தேசிய இனங்களின் சுதந்திர வேட்கையையோ, திறமையையோ கிஞ்சித்தேனும் பொருட்படுத்தாது மூர்க்கத்தனமாக வல்லாண்மையுடன் செயல்பட்டது. அத்துடன் உலக அரங்கில் யார் வலுவான ஒரு வல்லரசோ, அதனுடைய கைக்கூலியாட்களாக இந்திய ஆளும் கும்பலானது காலம் காலமாக செயல்பட்டு வருகின்றது. சூரிய அஸ்தமனத்தை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறியாத வல்லரசான பிரிட்டிஷ், இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பின் வாங்கியதுடன், தேவதாசி வர்க்கத்தைப் பேணிப் பாதுகாக்கும் இந்திய மரபுப் படியோ என்னவோ அமெரிக்க வல்லாண்மையுடன் சோரம் போனது. பின்னர் வியட்நாம் போன்ற பல நாடுகளில், அமெரிக்கா அம்பலப்பட்டு அடிபட்டு ஆக்கிர மிப்பு சக்தி குறைந்ததும், சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் நல்ல நண்பனாக மாறிக்கொண்டது. அதாவது உலக அரங்கில் எந்த ஒரு வல்லரசு வலுவானதாக அமைகின்றதோ அதன் கையாளாக, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஒரு குட்டி எஜமானாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இதற்காக தனது நாட்டிற் குள்ளேயே பல்வேறுபட்ட தேசிய இனங்களை மூர்க்கத்தனமாக அடக்கி யொடுக்கி, பிரிவினைத் தடைச் சட்டத்தை அமுல்படுத்தி ஆக்கிரமிப்பு சக்தியாக செயல்பட்டு வருகின்றது. இது, நாட்டினங்களின் நலனையோ அல்லது அவற்றின் சுதந்திரத் தையோ ஒருக்காலும் உருவாக்கிக் கொடுக்காது. இதைப் புரிந்துகொண்ட எவரும் இந்தியா தமிழீழ விடுதலைக்கு துணை வராது என்ற உண்மையைப் புரிந்து கொள்வார்கள்.

எனவே, தமிழீழத் தேசிய மக்களாகிய நாம் இந்தியா நம்மை விடுவிக்க வரும் என்ற தப்பான பிரச்சாரத்தை நம்பி இலவு காத்த கிளிபோல் இல்லாது நம்மை நாமே விடுவிக்கும் துரித முயற்சியில் ஈடுபடவேண்டும். சாட்சிக்காரன் காலில் வீழ்வதைவிட சண்டைக்காரனின் காலில் வீழ்வது மேல் என்ற வகையில் உண்மையான முற்போக்கு சக்திகள் எல்லாவற்றுடனும் உறவு வைத்து நமது தமிழ் மக்களையும், தொடர்ந்து சிங்கள மக்களையும் தரகு முதலாளிய - அரை நிலப் பிரபுத்துவ - ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித்து, புதிய ஜனநாயகப் புரட்சியை முன் எடுத்துச் செல்வோம்.

இவ்வாறாக, தமிழீழ விடுதலைக்கு நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை வரையறுத்து அதன் அடிப்படையில் எல்லா நட்பு சக்திகளையும் ஒன்று சேர தோழர் அழகன் பெயரால் அறைகூவல் விடுக்கின்றோம். சிறிய சக்தியாயினு லும் நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் தெளிவான ஒரு பாதையில், மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையின் வெளிச்சத்தில் அனைத்து நட்பு சக்திகளையும் ஓரணியில் அணி திரள அழைக்கின்றோம்.

ஐக்கியப்படு ! அணித் திரள் !! ஆர்ப்பரித்து எழு !!!

★ பச்சை இரத்தம் சிந்தவைத்த பாசிச ஆட்சியை முறியடிப்போம்.

★ தரகு முதலாளிய ஆட்சியை தரைமட்டம் ஆக்குவோம்.

★ ஏகாதிபத்தியங்களின் ஏவல் நாய்களை இலங்கையை விட்டே விரட்டியடிப்போம்.

☆ தமிழீழ விடுதலை அடைந்து புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்போம்.

*வெளியிடுவோர் :*

**தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை.**